## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.3/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணன் | மதம் | : இந்து |
| த/பெ | : சஞ்சீவி ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 82 | கிராமம் | : காசிநாகபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**29.01.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி ஏழுமலை யார் என்றால் என் மூத்த மகன் ஆவார். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 பேர் ஆவார்கள். ஏழுமலை, மீனா, முரளி ஆவார்கள். வழக்கு சொத்துக்கள் மொத்தம் ஒரு ஏக்கர் 3 செண்ட்டை நான் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் இல்லை. அவர் என்னை ஏமாற்றி கையெழுத்து வாங்கி கொண்டார். நான்தான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன் என்றால் நான் போகவில்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் சின்ன மகன் முரளி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள 1 முதல் 8 பக்கங்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 9ம் பக்கத்தில் உள்ளது நான்தான் என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்களில் 29/1, 29/2, 29/3 ஆகியவை என் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் ஆமாம். புல எண்.29/6, 29/12 பூர்வீக சொத்துக்கள் என்றால் ஆமாம். 12.02.1986 ல் நான், என் தம்பிகள் சண்முகம், சந்திரன் ஆகிய மூவரும் சேர்ந்து பாகம் பிரித்து கொண்டோம் என்றால் ஆமாம். அதில் வந்த சொத்துக்கள்தான் புல எண்.29/6, 29/12 என்றால் சரிதான். நாங்கள் பாகம் பிரித்து கொண்டதில் எ அட்டவணை சொத்துக்கள் எனக்கு வந்தது என்றால் ஆமாம்.

3. அந்த பாக ஆவணத்தைதான் நான் பி.வா.சா.ஆ 1 ஆக தாக்கல்

செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்துக்களுக்கு பட்டா ஏழுமலை பெயருக்கு மாறிவிட்டது என்றால் இல்லை. ஏழுமலைதான் வரி செலுத்தி வருகிறார் என்றால் அவர் என்னை ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டார். ஏமாற்றி எழுதி வாங்கியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்து தவிர எனக்கு வேறு சொத்துக்கள் 2 ஏக்கர் உள்ளது என்றால் 1 ஏக்கர் என் பெயரில் உள்ளது. அந்த சொத்துக்களுக்கு பட்டா என் பெயரில் வருகிறது என்றால் சரிதான். பட்டா எண்.148, 1072, 5314 ஆகியவை என் பெயரில் உள்ள பட்டாக்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி சொத்துக்கள் தவிர என் மனைவி தனம்மாள் பெயரில் சொத்துக்களை நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். தளம்போட்ட சுமார் 1530 சதுரடி அளவுள்ள மெத்தை வீடு என் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். அதன் புல எண்.31/1 என்றால் ஆமாம். புல எண்.29/21 ல் 15 செண்ட்டை நான் ஜுலை 2024 ல் ரூ.15 லட்சத்திற்கு விற்றேன் என்றால் ரூ.10 லட்சத்திற்கு விற்றேன். நான் யாருக்கு விற்றேன் என்றால் செங்கல்வராயனுக்கு விற்றேன். நான் விற்ற கிரைய பத்திரத்தில் ஏழுமலை கையெழுத்து செய்யவில்லை என்றால் ஏழுமலையும் என் மகளும் கையெழுத்து செய்யவில்லை. என் மகன் முரளியும் நானும் கையெழுத்து செய்துள்ளோம். புல எண்.29/6 ல் என் மகன் ஏழுமலை மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம். அதில் அவர் பெயரில் வரி ஏற்பட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் தெரியவில்லை.

5. என் மகள் மீனாவுக்கு வாதிதான் செலவு செய்து திருமணம் செய்தார் என்றால் இல்லை. நான்தான் திருமணம் செய்தேன். வாதி செங்கல் சூலை வைத்துள்ளார் என்றால் இல்லை. வாதி செங்கல் சூலை வைத்து என் மகள் மீனாவுக்கு வீடு கட்டி கொடுத்தார் என்றால் இல்லை. நான் என் மகள் பேச்சை கேட்டு 02.12.2020 ல் RDO விடம் மனு கொடுத்தேன் என்றால் நானாகதான் மனு கொடுத்தேன். அந்த மனுவின்பேரில் இருவரையும் வருவாய் கோட்டாட்சியர் அழைத்து விசாரித்தார் என்றால் ஆமாம். அதில் விசாரணை பின்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு இறுதியாக வாதிக்கு ஆதரவாக சொல்லிவிட்டார். எங்களை மாவட்ட ஆட்சியரிடம் செல்ல சொல்லிவிட்டார்.

6. வருவாய் கோட்டாட்சியர் எனது மனுவின் பேரில் நடவடிக்கை எடுக்க

எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறிவிட்டார் என்றால் இல்லை. 21.10.2019 ல் செட்டில்மெண்ட் எழுதிய தேதியில் என்னை ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டார் என்று நான் காவல் துறையில் எந்த புகாரும் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் நான் எந்த நிபந்தனையும் இல்லை என்றால் மொத்த ஆவணத்தையும் எழுதி வைத்துக்கொண்டு என்னை அழைத்தார். ஏன் பத்திர எழுத்தர் பவானியிடம் போகாமல் இங்கு வந்தாய் என கேட்டேன். என்னை கையெழுத்து போட சொன்னார். கிருஷ்ணமூர்த்தி படித்து காட்டிய போது 25 செண்ட் மட்டும் படித்து காட்டினார். முழுவதையும் படித்து காட்டவில்லை.

7. என் மகன் என்னை அடித்துவிட்டதாக நான் சொல்வதில் பொறுத்து நான் காவல்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் அவ்வாறு புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. ஏழுமலைக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் 20 வருடங்களுக்கு முன்பு ரேணிகுண்டாவில் விபத்து ஏற்பட்டது. ஏழுமலைக்கு விபத்து ஏற்பட்டதால் பரிதாபப்பட்டு நான் வழக்கு சொத்தை எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதி கோரியப்படி வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் இல்லை.

(மறு விசாரணை இல்லை)

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.3/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முரளி | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : காசிநாகபுரம் |
| தொழில் | : -- | வட்டம் | : திருத்தணி |

**29.01.2025**
**பி.வா.சா. 2 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)